பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 17

வெள்ளிக்கிழமை
13 டிசெம்பர் 2024

**மயங்கி வீழ்ந்து முதியவர் சாவு!**

☞11

# வரணியில் ஐவருக்கு மர்மக்காய்ச்சல்!

- ஐவரும் ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள்
- ஒருவருக்குத் தீவிர சிகிச்சை

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 13**

யாழ்ப்பாணத்தில் எலிக் காய்ச்சலும், மர்மக்காய்ச் சல்களும் தீவிரமாகப் பரவிவரும் நிலையில், வரணியில் உள்ள குறிப் பிட்ட ஒரு பகுதியில் (குறிச்சி) இருந்து ஐந்து பேர் நேற்று பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளனர். அவர்களில் ஒருவர் யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

☞11



## பெருந்தொகை கஞ்சாவுடன் காரைநகரில் இருவர் கைது

**யாழ்ப்பாணம், டிசெ. 13**

யாழ்ப்பாணம் - காரைநகர் கசூரினா கடற்கரையை அண்மித்த பகுதியில் 214 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

☞11

## கொழும்பிலிருந்து வந்த குழு யாழில் நேற்று தீவிர ஆய்வு!

**யாழ்ப்பாணம், டிசெ. 13**

யாழ்ப்பாணத்தில் பரவிவரும் மர்மக்காய்ச்சல்கள் மற் றும் எலிக்காய்ச்சல் தொடர்பாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவினர் நேற்று யாழ்ப்பாணத் தின் பல பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர்.

☞11

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் எமக்கு ஒரு விடயமே அல்ல

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 13**

நாடாளுமன்றத்தில் மூன்றி லிரண்டு பெரும்பான்மை பலம் இருப்பதால், சபாநா யகருக்கு எதிராக நம்பிக் கையில்லாப் பிரேரணை எமக்கு ஒரு விடயமே அல்ல என்று ஆளுங்கட்சி யான தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரே ரணை கொண்டுவரப்படும் என எதிரணி

☞11

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

**கொழும்பு, டிசெ. 13**

ஸ்ரீலங்கா நாடாளுமன்ற சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மா னித்துள்ளது.

☞11

## வரலாற்றின் மோசமான பக்கத்தில் பதிவாகுவாரா சபாநாயகர் ரன்வல?

**கொழும்பு, டிசெ. 13**

சபாநாயகர் அசோக ரன்வ லவுக்கு எதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணை முன் வைக்கப்படும் பட்சத்தில், அது சபாநாயகர் ஒருவ ருக்கு எதிராக மிகக் குறு கிய காலத்தில் முன்வைக் கப்பட்ட நம்பிக்கையில் லாத் தீர்மானமாக அமை யும் என்று சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

அத்துடன், இலங்கை வர லாற்றில்

☞11

## எம்.பி. ஆகிறார் மனோகணேசன்

### முடிவுக்கு வந்தன ஐ.ம.ச.யின் தேசியப் பட்டியல் குழப்பங்கள்



**கொழும்பு, டிசெ. 13**

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் நாடாளுமன் றத் தேர்தலை எதிர்கொண்டவருமான மனோ கணேசன், தேசியப்

☞11

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

## முன்னாள் ஆளுநர் அசாத் சாலியின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது!

### உயர் நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு இழப்பீடு வழங்குமாறும் உத்தரவு

**கொழும்பு, டிசெ. 13**

கொழும்பில் 2021ஆம் ஆண்டு நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பில் தெரிவித்த கருத்துகள் மூலம், இனங்களுக்கு இடையே முரண் பாட்டை உருவாக்கினார் என்ற குற்றச்சாட்டில் மேல்மாகாண முன் னாள் ஆளுநர் அசாத் சாலி பயங் கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டமை அவரது

☞11

## சிறைக் கைதியொருவர் மயங்கி வீழ்ந்து இறப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 13**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு சிறைச்சாலை அலுவலர்களால்

☞11

## சித்திரவதை முறைப்பாடுகளே அதிகளவில் கிடைக்கின்றன!

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 13**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பாணப் பிராந்திய அலுவலகத்துக்குக் கிடைக் கப்பெறும் முறைப்பாடுகளில் அனே கமானவை சித்திரவதை தொடர்பான முறைப்பாடுகளாகவே காணப்படு கின்றன என்று இலங்கை

☞11

## மீன்பிடிக்கச் சென்றவர் வலிப்பு வந்து இறப்பு!

**கிளிநொச்சி, டிசெ. 13**

ஆற்றில் மீன்பிடிக்கச் சென்றவர், வலிப்பு வந்ததையடுத்து ஆற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட, உழவனூர் பகுதியில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணிபுரியும் கணேசமூர்த்தி குலேந்தி ரன் (வயது-33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

☞11

**முச்சந்தி முரளி**



‘ஒரேயொரு மழைதான். நாடே இப்ப நடுங்கிக் கொண்டிருக்குது’

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைக் கட்டியெழுப்ப அரபு இராச்சியம் ஒத்துழைப்பு

கொழும்பு, டிசெ.13

**அபிவிருத்தி அடைந்த இலங்கையைக் கட்டியெழுப்ப தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய அரபு அமீரகம் இணக்கம் தெரிவித்துள்ளது.**



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை அதிகரிப்பதுடன், டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுத்தருவதாகவும் இலங்கைக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி தெரிவித்தார்.

இலங்கையின் ஆறாவது மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக ஐக்கிய அரபு அமீரகமே காணப்படும் நிலையில், அந்தச் சந்தை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்திக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அதேபோல் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவை மேலும் பலப்படுத்திக் கொள்வதோடு இலங்கைக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உதவியையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் தூதுவர் இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் உறுதியளித்தார். (ச-இ)

# நாகை மீனவர்கள் 9 பேர் விடுதலை!

## படகு ஓட்டுநருக்கு ரூ.35 இலட்சம் அபராதம்

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாகை மீனவர்கள் 10 பேரில் 9 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் படகு ஓட்டுநரான மற்றவருக்கு ரூ.35 இலட்சம் அபராதம் விதித்தும் மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட நாகை மீனவர்கள் 10 பேரை கைது செய்ய முற்பட்டபோது இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகு மீது மீன்பிடி விசைப்படகு மோதியதில் கடற்படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

அதனையடுத்து 10 மீனவர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றுவந்தது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 9 மீனவர்கள் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

மீன்பிடி விசைப்படகு மோதி ஏற்பட்ட விபத்தில் கடற்படைச் சிப்பாய் உயிரிழந்ததால் அவரது குடும்பத்துக்கு 10 லட்சம் ரூபா இழப்பீடும், கடற்படை ரோந்துப் படகு சேதமடைந்தமைக்கு ரூ.25 லட்சம் இழப்பீடும் மொத்தமாக ரூ.35 லட்சம் அபராதத்தை படகு ஓட்டுநர் செலுத்த வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. (ச-100)



# கல்வி என்பது பண்டமல்ல!

## பிரதமர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.13

கல்வி என்பது ஒரு பண்டம் அல்ல. அதனைப் பரிவர்த்தனை செயல்முறையாகக் கருதும் கலாசாரத்தை நீக்கவேண்டும். பாடசாலை மாணவர்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் தரவுகளின் அடிப்படையில் கொள்கைகள் வகுக்கப்படவேண்டும் என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'தற்போதுள்ள கல்வி முறையை மாற்றுவதற்கு பொருத்தமான உத்திகளைத் தயாரித்தல்' என்ற தலைப்பில் நடைபெற்ற செயலமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வி என்பது மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது. அறிவைப் பெறுவதைத் தாண்டி, அது தனிமனித வளர்ச்சிக்கும், கூட்டுச் சமூக மாற்றத்துக்கு வழிவகுக்கவேண்டும். இந்த மாற்றத்தை வளர்க்கும் திறன் கொண்ட கல்வி முறை எமக்குத் தேவை. கல்வி அமைச்சும் அதன் நிறுவனங்களும் கொள்கை முடிவுகளுக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மின்கட்டண இறுதிமுடிவு மக்களிடம் ஆலோசனை

கொழும்பு, டிசெ. 13



பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் ஆலோசனைகள் மற்றும் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் 2025 ஜனவரி 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2025 ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான 6 மாத காலப்பகுதியில் மின்கட்டணத்தை திருத்தமின்றி தொடர்வதாக மின்சாரசபை முன்மொழிந்தது.

அதற்கமைய பொது ஆலோசனை கேட்டல் நிகழ்வில் பொது மக்கள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும், இலங்கை மின்சாரசபையால் முன்வைக்கப்பட்ட மின்கட்டணத் திருத்த முன்மொழிவு தொடர்பில் எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்

அவற்றை ஆராய்ந்து மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதித் தீர்வு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# உறவு முறியாது!

கொழும்பு,டிசெ.13

எமது உரிமையை வென்றெடுப்பதற்காகவே சட்ட நடவடிக்கையில் இறங்கினோம். இதனால் ஐக்கிய மக்கள் சக்திக்கும், எமக்கும் இடையிலான உறவு முறியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப் பெறும் தேசியப் பட்டியலில் ஒன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளருக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும் என்ற புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆயினும் எமக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. எனவேதான் மாவட்ட நீதிமன்றத்தை நாடினோம்.

இந்த நடவடிக்கைமூலம் ஐக்கிய மக்கள் சக்திக்கும், எமக்கும் உள்ள தொடர்பு முறியாது என்றும் ஹக்கீம் குறிப்பிட்டார். (ச-44)



# பட்ஜெட் தயாரிப்பு கலந்துரையாடல்

கொழும்பு, டிசெ.13

2025 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான அமைச்சரவை மட்டத்திலான ஆரம்ப கலந்துரையாடல்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் வரவு - செலவுத் திட்ட பரிந்துரைகள் குறித்த கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு குறைக்கப்பட்டது பாதுகாப்பு

**கொழும்பு, டிசெ.13**

**முன்னாள் ஜனாதிபதிகள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்த அறிக்கைகளை மீளாய்வு செய்ததன் பின்னர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாதுகாப்பாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இதன்படி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் பாதுகாப்பு 116 பேரில் இருந்து 60 ஆக குறைக்கப்பட்டுள்ளது. ராஜபக்ஸவுக்கு வழங்கப்பட்டிருந்த மூன்று டிஃபென்டர் ரக வாகனமும் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 51 ஆகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பாதுகாப்பு எண்ணிக்கை 58 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பும் எதிர்காலத்தில் குறைக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சிறுமி துஷ்பிரயோகம் 30 வருட கடூழியச் சிறை

கொழும்பு, டிசெ.13

15 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை குற்றவாளியாக இனங்கண்ட திருகோணமலை மேல் நீதிமன்றம் குற்றவாளிக்கு 30 வருட சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் திருகோணமலை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பூர் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரினால் 2018 ஆம் ஆண்டு குறித்த சிறுமி மூன்று முறை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து அந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

பெப்ரவரியில்

## நயினாதீவு - குறிகாட்டுவான் புதிய படகுச்சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

நயினாதீவு - குறிகாட்டுவான் இடையே புதிய படகுப் பாதைச்சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் பொறியியலாளர் குறூஸ் தெரிவித்துள்ளார்.

குறிகாட்டுவான் - நயினாதீவு இடையே ஏற்கனவே ஒரு படகுப்பாதை பழுதடைந்துள்ள நிலையில் புதிதாக ஒன்றை எதிர்வரும் ஜனவரி மாதமளவில் கொள்வனவு செய்து பெப்ரவரி மாதம் சேவையில் ஈடுபடுத்தவுள்ளோம்.

இந்தப் படகுப் பாதையில் 4 வாகனங்கள் மற்றும் 50 பயணிகளை ஒரே நேரத்தில் ஏற்றிச் செல்லக் கூடிய நிலை காணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

ஊர்காவற்றுறையில்

## இரு நாள்களில் 18 வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

கடந்த இரு தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலையின் நிமித்தம் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 18 வீடுகள் இதுவரையான காலப்பகுதியில் சேதமடைந்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் மஞ்சுளா தேவி சதீசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முறையான அறிக்கையிடலை யாழ். மாவட்ட செயலகத்துக்கு வழங்கியுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)



இரணைமடுவின்

## 2 வான்கதவுகள் பகுதியளவில் திறப்பு

கிளிநொச்சி, டிசெ. 13

மழையுடன் கூடிய காலநிலையை அடுத்து இரணைமடுக்குளத்தின் 14வான் கதவுகளில் இரண்டு வான் கதவுகள் 6 இஞ்ச் அளவில் நேற்று மாலை திறந்து விடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை முதல் தொடர்ச்சியாக மழைபெய்து வருகின்றது.


இதனால் குளங்கள் மீண்டும் வான் பாய ஆரம்பித்ததையடுத்து இரணைமடுக்குளத்தின் இரண்டு வான் கதவுகள் பகுதியளவு திறக்கப்பட்டுள்ளன. எனவே தாழ் நிலப்பகுதி மக்களைத் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச-113)



## வழமைக்குத் திரும்பின தீவகப் படகுச் சேவைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

சீரற்ற காலநிலை காரணமாக இடைநிறுதப்பட்டிருந்த தீவகத்துக்கான படகுச் சேவைகள் நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளதாக பிரதேச செயலர்கள் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் சீரற்ற காலநிலையின் தாக்கம் குறைவடைந்த நிலையில் குறிகாட்டுவான் - நயினாதீவு, குறிகாட்டுவான் - நெடுந்தீவு, ஊர்காவற்றுறை - அனலைதீவு, ஊர்காவற்றுறை - எழுவைதீவு, காரைநகர் - ஊர்காவற்றுறை ஆகிய படகுச் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர்கள் தெரிவித்தனர். (ச-125)




'கலாநிதிப்பட்டத்தைப்போடுவானேன், கவலைப்படுவானேன்'எண்டு கடும் சிக்கலில் மாட்டுப்பட்டிருக்கிறார் இப்பத்தைய சபாநாயகர் அசோக ரன்வெல. தேவையில்லாமல் தன்ர பேருக்கு முன்னால கலாநிதிப் பட்டம் போட்டதால இப்ப அவர் ஏ.எல். படிச்சவரோ எண்டளவுக்கு எல்லாரும் அவரின்ர கல்விப்புலம் பற்றித் தோண்டத் தொடங்கிட்டினம். நாட்டின்ர எல்லாரும் மதிக்கிற முக்கியமான பதவியிலை சபாநாயகர் பதவியும் ஒண்டு. அப்பிடிப்பட்ட பதவியில இருக்கிற ஒருத்தர்' ஜப்பானில கலாநிதிப் பட்டம் வாங்கினனான், மொரட்டுவ யுனிவர்சிட்டியில எம்.இஞ்சினியரிங் பட்டம் வாங்கினனான்' எண்டு வாய்க்கு வந்தபடி 'கப்சா' அடிச்சுவிடேலாது. ஏனெண்டால் அந்தப் பட்டங்கள் எல்லாமே பார்லிமெண்டில பதியப்பட்டிடும். பிறகு ஆரும் அதைப் பொய்யெண்டு நிரூபிச்சால் மானங்கெட வேண்டியதுதான்.

சபாநாயகர் எந்த ஜப்பான் கம்பஸில கலாநிதிப் பட்டம் வாங்கினதெண்டு சொன்னாரோ அந்தக் கம்பஸ் அப்பிடியொரு பட்டத்தை நாங்கள் ரன்வெலவுக்கு குடுக்கேலை, ரன்வெல எண்டவர் எங்களிட்ட படிக்கவும் இல்லை எண்டு முகத்தில அடிச்சமாதிரிச் சொல்லிப்போட்டுது. உடனேயே ஆள் தன்ர 'லிங்க் டின்' சமூகவலைத்தள கணக்கை நைசா தூக்கிப்போட்டார். அதிலதான் அவர் கலாநிதி எண்டு போட்டவர். அந்த எக்கவுண்டே காணாமல் போனால், பார்லிமெண்டில பிழையாப் போட்டிட்டினமெண்டு சமாளிக்கலா மெல்லோ. அதாலதான் அந்த 'லிங்க் டின்' கணக்கை குளோஸ் பண்ணினவர். சீப்பு ஒளிச்சால் கலியாணம் நடக்காம விட்டிடுமோ? இப்ப பார்லிமெண்ட் வெப்சைட்டிலையும் சபாநாயகரின்ர பேருக்கு முன்னால தொங்கிக்கொண்டிருந்த இந்தக் கலாநிதிப் பட்டத்தை எடுத்திட்டினம். இதோட விசயம் முடிஞ்சாப் பரவாயில்லை. அவர் எம்.இஞ்சினியரிங் எண்ட பட்டத்தை மொரட்டுவ கம்பஸில எடுத்ததெண்டு சொன்னதால அடுத்தகட்டமா அதைத் துருவத் தொடங்கினா, அதுவும் பொய்யாம். அந்தக் கம்பஸில அப்பிடியொரு பட்டமே குடுக்கிறேலையாம். அங்க எம்.எஸ்.ஸி.இஞ்சினியரிங் எண்டுதான் குடுக்கிறவையாம். அங்க அவர் படிச்சவரோ இல்லையோ எண்டும் பழைய பைல்களைக் கிண்டத்தொடங்கிட்டினம்.

கலாநிதிக்கு வந்த ஆப்பு, எம்.இஞ்சினியரிங்கோட போனாலாவது பரவாயில்லை. அவரின்ர ஏ.எல். ரிசல்ட்டையுமெல்லோ கதிகலங்க வைச்சிட்டுது. சபாநாயகர் 'இணைந்த கணிதம்' எண்டொரு பாடத்தை ஏ.எல்.படிக்கேக்க எடுத்ததெண்டு காட்டியிருக்கிறார். சபாநாயகரின்ர வயதுக்கு 90 ஆம் ஆண்டுக்கு முன்னுக்குத்தான் ஏ.எல். படிச்சிருக்கோணும். பகிடி என்னெண்டால் 2000 ஆண்டுதான் 'இணைந்த கணிதம்' எண்ட பாடமே ஏ.எல்.லுக்கு வந்தது. அப்ப 2000 ஆம் ஆண்டு வந்த பாடத்தை 90 ஆம் ஆண்டுக்கு முதலே படிச்சு ,பாஸ் பண்ணுற அதிசய சக்தி சபாநாயகருக்கு இருக்குது போல. இல்லாட்டி 90 ஆம் ஆண்டில இருந்து 'ரைம் மெஷினில' 2000 ஆம் ஆண்டுக்கு வந்து, இப்பிடி 'இணைந்த கணிதம்' பாடத்தை சபாநாயகர் எழுதிப்போட்டுப் போனாரோ தெரியேலை.

இஞ்சையும் இப்பிடிக் காசைக் குடுத்து கலாநிதி, கல்லாநிதி, பொல்லாநிதி எண்டு பட்டங்களை வாங்கிறவையும், விக்கிறவையும் இப்பிடித்தான் எங்கை யாவது மொக்குத்தனமா மாட்டுப்பட்டு முழுசத்தான் போயினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டாடுவோம் -

## COYLE இன் I AM the Sri Lankan Entrepreneur 2024

## "நான் இலங்கைத் தொழில்முனைவோர்களில் ஒருவன் 2024"




இலங்கை தொழில்முனைவோர் சங்கம் (COYLE) பெருமையுடன் வழங்கும் ஐ யுஆ வாந ளுசை டுய மெயெ நுவெசநிசநநெரச 2024 , இது நாட்டின் மிகச்சிறந்த தொழில்முனைவோரைக் கொண்டாடுவதற்கும் அவர்களை மேம்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மதிப்புமிக்க விருது வழங்கும் மாலை நிகழ்வாகும். 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த விடே நிகழ்வானது, இலங்கையின் தொழில்துறைகளை முன்னோக்கி கொண்டு சென்ற துணிச்சலான தூரநோக்கும், புத்தாக்க திறனும் கொண்டவர்களை கௌரவிக்கும் வகையில் அமையவுள்ளது.

இந்த ஆண்டுக்கான விருதுகள், இத்தீவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் விண்ணப்பிப்பவர்க ளுக்குத் திறக்கப்பட்டுள்ளது. இது தொழில்முனைவோரின் உண்மையான தேசிய கொண்டாட்டத்தை பிரதிபளிக்கிறது. மாகாணம் முதல் மாவட்ட மட்ட அங்கீகாரம் வரை, இந்த முயற்சியானது, இலங்கை வர்த்தகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கின்ற தொழில் முனைவோரின் திறமையை எடுத்துக்காட்டுகிறது. சிறந்த இளம் தொழில்முனைவோர், சிறந்த பெண் தொழில் முனைவோர், சிறந்த சமூக தொழில்முனைவோர் மற்றும் ஆண்டின் சிறந்த தொழில்முனைவோர் போன்ற பல்வேறு பிரிவுகளில் 65 க்கும் மேற்பட்ட விருதுகளுடன், இந்த நிகழ்வு திறமை மற்றும் சாதனைகளின் எழுச்சியுட்டும் காட்சியாக அமையப்பெறவுள்ளது.

நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யும் மதிப்பீட்டு செயல்முறையானது இலங்கையின் நிபுணத்துவம் கொண்ட சுயாதீன குழுவான எர்னஸ்ட் ரூ யங் இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழில் முனைவோர் சிறந்து விளங்கும் இலங்கையின் மிகவும் நம்பகமான அங்கீகாரங்களில் ஒன்றாக இவ்விருதின் நற்பெயரை வலுப்படுத்துவதற்கு இவ்வணுகுமுறையானது நிச்சயம் வழிவகுக்கும்.

ஊழுலுடுநு இன் யங் லங்கன்ஸ் இன் முயற்சியால் வழங்கப்படவிருக்கும் இவ்விருதுகள் அடுத்த தலைமுறை தலைவர்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. வளர்ந்து வரும் தொழில்முனைவோரை அங்கீகரிப்பதன் மூலமும், இளம் கண்டுபிடிப்பாளர்களை மேம்படுத்துவதன் மூலமும், வளர்ந்து வரும் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகளை வளர்ப்பதன் மூலமும் COYLE, ஒரு வலுவான மற்றும் உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட வணிக தளத்திற்கு வழி வகுக்கிறது.

25 ஆண்டுகளுக்கும் மேலாக, ஊழுலுடுநு தொழில் முனைவை ஊக்குவிப்பதிலும், புதுமைகளை வளர்ப்பதிலும், ஆயிரக்கணக்கான தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் செழிக்க வாய்ப்புகளை உருவாக்குவதிலும் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது. இந்த தலைமைத்துவ மரபு " AM the Sir Lankna Entrepreneur 2024" மூலம் தொடர்கிறது, இலங்கையின் வர்த்தக சமூகத்தை வலுப்படுத்துவதில் ஊழுலுடுநு இன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

விண்ணப்பங்களை இப்போது COYLE இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உள்ளீடுகள் ஜனவரி 15, 2025 அன்று முடிவடைகிறது, எனவே ஆர்வமுள்ள தொழில்முனைவோர் தங்கள் சாதனைகள் மற்றும் தொலைநோக்குப் பார்வையை வெளிக்கொண்டுவருவதற்காக விரைவாக செயல்பட ஊக்குவிக்கப்படுகிறார்கள். இலங்கையை முன்னோக்கி செலுத்தும் தொழில் முனைவோர் உணர்வைக் கொண்டாடுவதில் எங்களுடன் இணையுங்கள்.

ஒன்றாக, தொழில்துறையின் எதிர்காலத்தை வடிவமைக்கும், அடுத்த தலைமுறை தலைவர்களை மேம்படுத்தி, ஒரு நெகிழ்ச்சியான, புதுமையான மற்றும் உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிப்போரை கௌரவிப்போம்.

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும்.

**மிதுனம்** இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத் துணை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்** தாய் வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கி யம் மேம்படும். ஆனால், தந்தையின் உடல்நலனில் கவனம் தேவைப்படும். பிள்ளைகள் கேட் டதை வாங்கித் தந்து மகிழ்வீர்கள்.

**கன்னி** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்னைகளும் ஏற்படக் கூடும். உறவினர்கள் வகையில் குடும்பத்தில் பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். முயற்சிகள் வெற்றி கரமாக முடியும்.

**விருச்சிகம்** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்** வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். அலுவலகத்தில் அதிகாரிகள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு அலுவலகப் பணியின் காரணமாக வெளியூர் செல்லவேண்டி வரும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் விவாதம் தவிர்ப்பது நல்லது. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

கல்வியறிவு பெற்றவராக இருப்பதே ஒரு புரட்சியாளரின் முதற் கடமை.

-சேகுவேரா-

## எலிக்காய்ச்சலை எதிர்கொள்ள...!

வடக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாண மாவட்டத்திலும் எலிக்காய்ச்சல் தொற்றால் மரணங்கள் அதிகளவில் பதிவாகியிருக்கின்றன. நாடளாவிய ரீதியில் எலிக்காய்ச்சலால் கடந்த மாதத்தில் மட்டும் 9 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும், 200 பேர்வரையில் உயிரிழந்துள்ளனர் என்பதும் சுகாதாரத்துறையினரின் தரவுகள். முன்னெப்போதும் இல்லாத வகையில் வடக்கில் பிரதானமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் தொற்றால் மரணங்கள் ஏற்பட்டிருக்கும் நிலையில், அதிக அவதானத்தைச் செலுத்தவேண்டிய விடயமாக இது மாறியிருக்கின்றது.

கடந்தவாரங்களில் வடக்கில் கொட்டித்தீர்த்த மழையால் வயல் நிலங்களிலும், ஏனைய தாழ்நிலங்களிலும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதுவே எலிக்காய்ச்சல் தொற்றுப் பரவப் பிரதான காரணமாக இருக்கின்றது. எலிக்காய்ச்சல் பக்றீரியாத்தொற்றுகளால் ஏற்படுகின்றது. 'எலியின் சிறுநீர், சளி சுரப்புக்களின் வழியான பக்றீரியாத் தொற்றுகளால் இது மனிதர்களிடையே பரவுகின்றது. இந்தக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான காய்ச்சல், தலைவலி, உடல் வலி, கண் சிவத்தல், வாந்தி -குமட்டல் போன்ற அறிகுறிகள் தென்படும்' என்கின்றன மருந்துவத்தரவுகள். வடக்கில் - யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களாக காய்ச்சல் காரணமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலேயே எலிக்காய்ச்சல் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியிருக்கின்றது. பருத்தித்துறை ஆதார மருத்துவமனையிலேயே அதிகளவானோர் காய்ச்சலுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். எலிக்காய்ச்சலைத் தாண்டிய வைரஸ் தொற்றுகள் ஏதேனும் பரவுகின்றதா என்ற ஆய்வுகளும் மருத்துவத் துறையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவத்துறைக்கு அப்பால் பொதுமக்களும் இயைந்தோட வேண்டியது கட்டாயம். காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற வேண்டிய அதே நேரம், தொற்றில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான சுகாதார வழிமுறைகளையும் கைக்கொள்ளவேண்டும். வயல்களில் இறங்கி வேலை செய்யும் விவசாயிகள் வேறு தேவைகளுக்காக வயல்களில் இறங்கும் எவருக்கும் இந்த நோய்த்தொற்றுக்கான சாத்தியங்கள் அதிகமுள்ளன.

எலிக்காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளாக எலிகளைக் கட்டுப்படுத்தல், வயல்களைச் சூழவுள்ள பிரதேசங்களைச் சுத்தமாகப் பேணுதல், தண்ணீர் தேங்கிநிற்காது வழிந்தோடுவதற்கான வழிகளை ஏற்படுத்தல், உடலைச் சுத்தமாகக் கழுவுதல் போன்ற வழிமுறைகள் குறிப்பிடப்படுகின்றன. தனிநபர் சுகாதாரத்தைச் சரியாகப் பேணுவதன் ஊடாக இந்தத் தொற்றுப் பரவுவதைத் தடுக்கமுடியும். தேவையற்ற அனர்த்தங்களைத் தடுப்பதற்கு பொதுமக்கள் இந்தவிடயத்தில் விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது அவசியம்.கடந்தகாலங்களில் மழைக்காலம் ஆரம்பித்தால் வடக்கில் - யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குத் தொற்று ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது. மழைவெள்ளம் காரணமாக பெருகும் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், ஒவ்வொரு ஆண்டும் யாழ்ப்பாணம் மாவட்டம் டெங்குத்தொற்று அபாய வலயமாகவே இருந்தது. ஆனால் இம்முறை டெங்குத் தொற்றுக்கு மேலதிகமாக அபாயமிக்க எலிக்காய்ச்சல் தொற்று இனங்காணப்பட்டிருப்பது சுகாதாரத் துறையினருக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். ஆதலால் பொதுமக்களும் தங்களால் இயலுமான முயற்சிகளை மேற்கொள்வது நிலைமையைச் சமாளிக்க உதவும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




பயிரழிவை தடுக்க

# குரங்குகளுக்கு கருத்தடை



கொழும்பு, டிசெ.13

**பயிரழிவை நிவர்த்தி செய்யும் முகமாக குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் முன்னோடி வேலைத்திட்டம் மாத்தளையில் நேற்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.**

கால்நடை மருத்துவர்களின் ஆதரவைப் பெற்ற இந்தத் திட்டத்துக்கு விவசாய அமைச்சு 4.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

குரங்குகள் கிரிதலேயில் உள்ள வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்துக்குக் கொண்டுசெல்லப் பட்டு, அங்கு அவை கருத்தடை செய்யப்பட்டு பின்னர் மீண்டும் காட்டுக்குள் விடப்படும். விவசாய அமைச்சு இந்தத் திட்டத்தை எதிர்வரும் காலங்களில் நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்த உத்தேசித்துள்ளது. இந்தத் திட்டம் விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு உதவுவதும் குரங்குகளின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவது மட்டுமே என்றும் விவசாயஅமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## மரக்கறிகளின் விலை ரூ. 1000 கடந்தது!

கொழும்பு, டிசெ.13

சில பகுதிகளில் ஒரு கிலோ கிராம் போஞ்சி, பச்சை மிளகாய், கறிமிளகாய் ஆகியவற்றின் சில்லறை விலை 900 முதல் 1000 ரூபா வரை அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 400 ரூபாவாகவும், பாகற்காய் 600 ரூபாவாகவும், தக்காளி, வெ ண்டிக்காய், கத்தரிக்காய், கிழங்கு ஆகியவற்றின் விலை 400 ரூபா முதல் 450 ரூபா வரையிலும் உயர்ந்துள்ளது. புடலங்காய், முள்ளங்கி, கரட், பூசணிக்காய் ஆகியவற்றின் சில்லறை விலை 300 ரூபா முதல் 350 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இறக்குமதி தே.எண்ணெய் விலையுயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.13

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

அதற்கமைய, ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெயின் புதிய விலை 800 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேங்காய் விலை உயர்வினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

## உணவுப் பொருள்கள் 20% விலையதிகரிப்பு

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் உணவுப் பொருள்களின் விலைகள் சுமார் 20 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

அதற்கான தீர்வை அரசாங்கம் இதுவரையில் வழங்கத் தவறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார். இது தொடர்பில் நாட்டு மக்கள் அவதானம் செலுத்தி வருவதாகவும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)




## வரிசெலுத்தல் காலக்கெடு

யாழ்ப்பாணம், டிசெ.13

கடந்த நவம்பர் மாதத்தில் நிறுத்திவைக்கப்பட்ட வரிக் கொடுப்பனவுகளை டிசெம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் செலுத்துமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

குறித்த வரி செலுத்துதலில் முன்கூட்டிய வருமான வரி, நிறுத்தி வைக்கும் வரி மற்றும் முன்கூட்டிய தனிநபர் வருமான வரி ஆகியவை அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை

சனிக்கிழமை - கார்த்திகை - 28

14.12.2024

சுபநேரம் : 03.21 - 04.51

ராகுகாலம் : 09.21 - 10.51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

திருநெல்வேலி யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகே உள்ள எமது காரியாலயத்திற்கு

1. கணக்கியல், கணக்காய்வு பயிலுநர் A/L கணக்கியலில் சித்தியுடையோர்
2. சமையல் வேலை தெரிந்த ஆண்/பெண் தொழிலாளி

தொடர்புகளுக்கு:
077 953 0496

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான 325-5244ம் இலக்க அசோக்லேடன் பாரவூர்தி பகிரங்க ஏலத்தில் 28.12.2024ம் திகதி சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு கண்டிவீதியில் உள்ள சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைமைக் காரியாலயத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இவ்லொறியினை பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 8.30 மணிதொடக்கம் பி.ப.4.00 மணிவரை பார்வையிட முடியும். இவ் ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்பு வோர் ஏலவிற்பனைத் திகதி அன்று காலை 9.00மணிக்கு முன்னர் மீளளிக்கமுடியாத முற்பணமாக ரூ.1000/= வும் மீளளிக்கக்கூடிய முற்பணமாக ரூ.10000/=வும் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள முடியும். ஏலத்தில் லொறியினைப் பெற்றுக்கொள்வோர் ஏலத் தொகையினை முழுமையாக அன்றைய தினமே சங்கத் தில் செலுத்தி லொறியினை சங்கத்திலிருந்து கொண்டு செல்ல வேண்டும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தலைவர்,**
**சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்,**
**தொலைபேசி இல. 021 227 0830**

(cr.43871) (N-I)

# சொக்கப்பனை எரித்தல் இன்று

திருக்கார்த்திகை தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை ஆலயங்களில் குமாராலயத் தீபம் சொக்கப்பனை எரித் தல் இடம்பெறவுள் ளது.

நீர்வேலி கந்தசு வாமி கோவிலில் காலை சண்முக அர்ச்சனை இடம் பெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து முருகப் பெருமான் வீதிவ லம் எழுந்தருளி சொக்கப்பனை எரித் தல் இடம்பெறும்.

அதனையடுத்து நாளை சனிக்கி ழமை சர்வாலய தீபம் வீடுகளில் ஏற் றுதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ரி-17)

# மாபியாக்களை ஒழிக்காவிடின் கோத்தாவின் கதியே அநுரவுக்கும்

## இலங்கை மின்சார பொதுச்சேவைச் சங்கம்

கொழும்பு,டிசெ.13

மின்சாரசபையை ஆக்கிரமித்துள்ள மாபியாக்களை கட்டுப்படுத்தாமல் மின் கட்டணத்தைக் குறைக்கமுடியாது. அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் சேவைக் கட்டமைப்பில் உள்ள மாபியாக்களை கட்டுப்படுத்தாவிடின் கோத்தாபய ராஜபக்சவின் கதியே தற் போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும் என இலங்கை மின்சார பொதுச்சே வைச் சங்கத்தின் தலைவர் மாலக விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆட்சிமாற்றம் மாத்திரமே ஏற்பட்டுள் ளது. கடந்த அரசாங்கத்தின் செயற்பா டுகளையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுக் கிறது. நீர்மின்னுற்பத்தித் துறையின் ஊடாக மின்சாரம் அதிகள வில் உற்பத்தி செய்யப்படுகின்ற பின் னணியில் எதிர்வரும் ஆறு மாதங்க ளுக்கு மின்கட்டணத் தைக் குறைக்க முடியாது என்று மின்சாரசபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மின்சாரசபையை ஆக்கிரமித்துள்ள மாபியாக்களை கட்டுப்படுத்தாமல் மின் பாவனையாளர்க ளுக்கு ஒருபோதும் நிவாரண மளிக்கமுடியாது. அத்தியாவ சிய உணவுப் பொருட்கள் மற்றும் சேவைக் கட்டமைப்பில் உள்ள மாபி யாக்களை கட்டுப்படுத்தாவிடின் முன் னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் சவுக்கு நேர்ந்த கதியே தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வுக்கு நேரிடும் என்றும் அவர் குறிப்பிட் டார். (ச-இ)

# திருக்கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ.13

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகை உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை, மாலை உற்சவங்களாக நடை பெறுவுள்ளது. மு.ப.10 மணிக்கு காலைச் சந்திப் பூசையும் மு.ப.10.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி உலாவும் இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு சாயரட்சைப் பூசை யைத் தொடர்ந்து இரண்டாம் காலப் பூசை நடைபெறும். மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து வள்ளி தெய்வ நாயகி சமேத ரராக முத்துக்குமாரசுவாமி உள்வீதியில் வலம் வந்து கைலாச வாகனத்தில் எழுந் தருளுவார். அதனைத் தொடர்ந்து ஆலய முன்றலில் சொக்கப்பனை எரிக் கும் நிகழ்வும் நடைபெறும். (25, 66)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான 2 ஆவது மீள்கேள்வி அறிவித்தல் - 2025

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் என்பன 2025ஆம் ஆண்டிற்கு (01.01.2025 - 31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்கான 2 ஆவது மீள்கேள்விகள் சபையினால் கோரப் படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 13.12.2024 – 19.12.2024 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 19.12.2024 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 19.12.2024 வியாழக்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 19.12.2024 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | 26,505.00 |
| 2 | அச்சுவேலி பொதுச்சந்தை | - | 1,000.00 | 200,000.00 | 9,375,075.00 |
| 3 | அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | 1,130,310.00 |
| 4 | வளலாய் கோழி இறைச்சிக்கடை புதிய கட்டடம் | 1,600.00 | 1,000.00 | 10,000.00 | 282,150.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டடங்கள்) | | | | |
| 5 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | 914,850.00 |
| 6 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | 56,430.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 7 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | 489,060.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.10.26. 2024.11.23 ஆம் திகதிகளில் இப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2024.12.13**

(CR/43872) J-1

# சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.13

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத் தால் கடலக மாலுமி கற்கைநெறி தேசிய தொழிற் தகைமைக்கான சான்றிதழ் மட்டம் - 4 க்கான மதிப்பீட்டுப் பரீட்சை யில் சித்தி பெற்றவர்களுக்கும் மற்றும் கடற்பாசி வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு ஆகிய கற்கைநெறிகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, யாழ்.மாவட்டச் செயலகக் கேட் போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கோ.அருள்சிவம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ் வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன், இலங்கைச் சமுத்திரப் பல்க லைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசி ரியர் வசந்த இரட்நாயக்க ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் மார்கழி இசை விழா

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ். இந்தியத் துணைத்தூதரகம், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசை விழா எதிர்வரும் 27, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளதாக யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பி.ப. 5 மணி முதல் இரவு 9 மணி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மண்ணில் புகழ்பூத்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் 'இசைச் சங்கமம்', யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள் வழங்கும் 'தமிழ் இசை அரங்கு', யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' இலக்கிய நாடகம், யாழ். பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்களின் 'தேவன் எங்கே' நாட்டிய நாடகம், பேராசிரியர் சி.மௌனகுருவின் நெறியாழ்கையுடன் டவர் தமிழ் நாடகப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் 'இராவணேசன்' வடமோடி நாடகம் ஆகியன இடம்பெறவுள்ளதுடன், 28 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மண்ணில் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான்களின் 'இசைச் சங்கமம்', திருமதி கவிதா வாமதேவனின் 'விரலிசை கானங்கள்', சிவசிறீ விஸ்வபிரசன்னக் குருக்கள் வழங்கும் 'தெய்வீக இசையரங்கு', கெ.பி நாதனின் 'நாத் சங்கமும்', யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் 'கடல் கோள் கடந்த தமிழர் நாட்டிய நாடகமும்' ஆகியன இடம்பெறவுள்ளதுடன், 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருமதி வாசஸ்தபி ரஜீந்திரன் நெறியாள்கையில் இந்தியத் துணைத்தூதரக இசைத்துறை மாணவர்கள் வழங்கும் 'மதுர கானங்கள்', யாழ். மண்ணின் புகழ் பூத்த தவில் நாதஸ்வர 'இசைச் சங்கமம்', யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் 'தமிழ் இசை அரங்கு', நர்த்தனஷேத்திரா நடனப்பள்ளி மாணவர்களின் 'சூடிக்கொடுத்த சுடர்கொடி ஆற்றுகை', இந்தியப் புல்லாங்குழல் வித்துவான் சிறீதர் தலைமையிலான 'புல்லாங்குழல் இசை', யாழ். பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்களின் 'அகலிகை சாப விமோசனம் நாட்டிய நாடகம்' ஆகிய நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. நிகழ்வுக்கு அனுமதி இலவசம் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ரி- 125)

யாழ்ப்பாணத்தில்

# சோலர் அனுமதியில் முறைகேடு இலங்கை மின்சாரசபை அநீதி!

## ஆணைக்குழு நடவடிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ. 13**

**யாழ்ப்பாணத்தில் சோலர் அனுமதி வழங்கல் தொடர்பில் இலங்கை மின்சாரசபையின் யாழ்ப்பாணப் பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகம் தவறிழைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட பாவனையாளருக்கு உடனடியாக நீதி வழங்குமாறும் பணித்துள்ளது.**

யாழ்ப்பாணம் - சுன்னாகம் வாரியப்புலம் பகுதியைச் சேர்ந்த மின்பாவனையாளர் ஒருவர் 2023 ஆண்டு விண்ணப்பித்தபோது, அவருக்கு அனுமதி வழங்காமல், 2024ஆம்ஆண்டுவிண்ணப்பித்த அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்குச் செல்வாக்கின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத கட்டடத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனையடுத்து அவருக்கு அனுமதியை வழங்குமாறு பணிக்கப்பட்ட பின்னரும், இணைப்புக்காக 11 இலட்சம் ரூபா செலுத்துமாறு கோரியமையை ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்ததை அடுத்தே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளருக்கு மேற்கண்டவாறு பணித்துள்ளது. சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தில் சோலர் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களில் பலருக்கு அனுமதி வழங்கப்படாமை, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர் பொருத்துவதில் பாரபட்சம் காட்டுதல் போன்ற முறைகேடுகள் குறித்து இலங்கை மின்சாரசபையின் தலைமை அலுவலகத்துக்கும், மின் வலு சக்தி அமைச்சுக்கும், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இது வரை பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அனுமதியை வழங்குமாறு உத்தரவிடப்பட்ட போதும், பிராந்திய மின் பொறியியலாளர் அவை குறித்துக் கிஞ்சித்தும் கவனமெடுக்காமல் தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் சோலர் அனுமதிகளை வழங்கி வந்துள்ளார். இந்தநிலையில் இணைப்புக்கான அனுமதி வழங்கல் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்று மின்வலுசக்தி அமைச்சரிடம் நேற்று நேரடியாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை முறைகேடுகள் நடந்துள்ளன என்பதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்களை இலங்கை மின்சார சபையிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக வாடிக்கையாளர்கள் பலர் கேட்டிருந்த போதிலும், இது வரை அத்தகைய தகவல்கள் எவையும் வழங்கப்படவில்லைஎன்பதும் தெரியவந்துள்ளது. (ச-10-26-125)



# சாவகச்சேரியில் டெங்கு ஒழிப்பு

சாவகச்சேரி, டிசெ. 13

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால், டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி, சங்கத்தானை, மீசாலை வடக்கு, கொடிகாமம் தெற்கு, மீசாலை கிழக்கு ஆகிய இடங்களில் நீர் தேங்கக் கூடிய கொள்கலன்கள் உள்ளூராட்சி சபைகளின் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் சேகரிக்கப்பட்டன. நாவற்குழி கிழக்கு, சரசாலை தெற்கு ஆகிய பிரிவுகளிலும் இன்று வெள்ளிக்கிழமை சேகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுமென சுகாதாரப்பிரிவினர் அறிவித்துள்ளனர். (ச-25, 9)



# அபிவிருத்தித் திட்டங்கள் முன்னேற்ற மீளாய்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ். அபிவிருத்தித் திட்டங்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது வேலைத்திட்டங்களை குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சவால்கள் மற்றும் வேலைத்திட்டங்களில் திருப்திகரமான முன்னேற்றம் என்பவை ஆராயப்பட்டன. மேலும் நலன்புரி நன்மைகள் (அஸ்வெசும) தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. கலந்துரையாடலில் பிரதம கணக்காளர்,மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அஸ்வெசுமத் திட்டத்துக்குப் பொறுப்பான மாவட்ட ஒருங்கிணைப்பாளர், பிரதேச செயலக பிரதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். [illegible]

# ஆட்கடத்தலில் கப்பம்; பெண்ணுக்குச் சிறை!

யாழ்ப்பாணம்,டிசெ.13

ஆட்களைக் கடத்தி கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பெண்ணொருவருக்கு 3 வருட சிறைத்தண்டனையும் 15 லட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பெண்ணுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் அவரின் கணவருக்கும் 15 லட்சம் ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் கட்டளை பிறப்பித்துள்ளது. கடந்த 2011 ஆம் ஆண்டு சாவகச்சேரி வர்த்தகரொருவரின் மகனை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக அழைத்துச்சென்று கொழும்பில் தடுத்துவைத்து பெற்றோரிடம் 28 லட்சம் ரூபா கப்பம் கேட்டு பணம் பறித்த குற்றச்சாட்டில் குறித்த தம்பதியர் கைதுசெய்யப்பட்டு கடந்த 11 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றம் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கு 3 வருட சிறைத்தண்டனையுடன் தலா 15 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 3 வருடங்கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. அத்துடன் முதலாம் இரண்டாம் எதிரிகளுக்கு தலா ஆறு லட்சம் ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-33-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் - சபாநாயகர் சந்திப்பு



கொழும்பு, டிசெ.13
ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலத் நசீர் அல்மேரி இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் அசோக ரன்வலவை கடந்த திங்கட்கிழமை சந்தித்தார்.

2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உலக அரசாங்கங்களின் மாநாட்டில் உரையாற்றுமாறு இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி அழைப்பு விடுக்கவிருப்பதாகவும் இலங்கைக்கான தூதுவர், சபாநாயகரிடம் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, இலங்கையுடன் தமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்ள ஐக்கிய அரபு இராச்சியம் தயாராக இருப்பதாகவும், வெளிப்படையான மற்றும் ஈர்க்கக்கூடிய முதலீட்டு நடைமுறையை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.
(ச-25)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானப் பண்ணை, அறிவியல்நகர், கிளிநொச்சியில் பின்வரும் கால்நடைகள் 18.12.2024 அன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆடுகள் :-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | கடா/மறி |
|---|---|---|---|
| 0043 | சானன் கலப்பு | 3 வருடம் | மறி |
| 0050 | சானன் கலப்பு | 3 வருடம் | கடா |
| 0042 | சானன் கலப்பு | 4 வருடம் | கடா |
| 0052 | சானன் கலப்பு | 1 வருடம் | கடா |
| 0053 | சானன் கலப்பு | 1 வருடம் | கடா |
| 0036 | ஜமுனாபாரி | 1 வருடம் | மறி |
| 0051 | சானன் கலப்பு | 1 வருடம் | மறி |

செம்மறி ஆடுகள் :-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | கடா/மறி |
|---|---|---|---|
| 0023 | ரெட்மெட்ராஸ் கலப்பு | 3 வருடம் | கடா |
| 0032 | ரெட்மெட்ராஸ் கலப்பு | 3 வருடம் | கடா |
| 0034 | பானூர் கலப்பு | 3 வருடம் | கடா |
| 0035 | ரெட்மெட்ராஸ் கலப்பு | 2 வருடம் | கடா |
| 0037 | ரெட்மெட்ராஸ் கலப்பு | 2 வருடம் | கடா |
| 0042 | பானூர் கலப்பு | 1 வருடம் | கடா |
| 0041 | பானூர் கலப்பு | 1 வருடம் | கடா |

மாடுகள் :-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | நாம்பன்/பசு |
|---|---|---|---|
| 0001 | ஜேர்சி கலப்பு | 10 வருடம் | பசு |
| 0004 | ஜேர்சி கலப்பு | 10 வருடம் | பசு |
| 0018 | சகிவால் கலப்பு | 3 வருடம் | நாம்பன் |
| 0019 | ஜேர்சி கலப்பு | 3 வருடம் | நாம்பன் |
| 0022 | சகிவால் கலப்பு | 2 வருடம் | நாம்பன் |
| 0026 | சகிவால் கலப்பு | 2 வருடம் | நாம்பன் |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 16.12.2024 **(திங்கட்கிழமை)** காலை 10.30 மணிக்கு விவசாயபீடத்தின் விலங்கு விஞ்ஞானப் பண்ணை, அறிவியல்நகர், கிளிநொச்சியில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்ட பின்னர் **மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00** இனை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கி கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்வதுடன் 18.12.2024 அன்று ஏலவிற்பனைக்கு வருகை தரும்போது **மீளப்பெறக்கூடியதாக ரூபா 5,000.00** இனையும் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்குகொள்ள முடியும்.

**மக்கள் வங்கிக் கணக்கிலக்க விபரம்:**
கணக்குரிமையாளர்: நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
**மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 செலுத்த வேண்டிய**
**கணக்கிலக்கம் : 97000060000276**
**மீளப்பெறக் கூடிய பதிவுக்கட்டணமாக ரூபா 5000.00 செலுத்த வேண்டிய**
**கணக்கிலக்கம் : 97000440002612**
நோக்கம்: ஏலவிற்பனைக்கான விண்ணப்பக் கட்டணம்

**ஏலவிற்பனையானது 18.12.2024 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு விவசாயபீடத்தின் விலங்கு விஞ்ஞானப்பண்ணை, அறிவியல்நகர், கிளிநொச்சியில்** நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

**பதிவாளர்**
(cs 43877) J-1



## மரண அறிவித்தல்



பிறப்பு 19 . 12 . 1958
இறப்பு 12 . 12 . 2024

### கந்தையா ஆனந்தராசா
(ஆனந்தன்- கனகு கராஜ் திருநெல்வேலி)

நாவற்குழி கிழக்கு தச்சன் தோப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆனந்தராசா அவர்கள் நேற்று (12.12.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - காமாட்சி தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் - கனகேஸ்வரி தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை - செல்வமணி தம்பதியரின் மருமகனும், விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், நிசானந்தன் அவர்களின் பாசமிகு தந்தையும், நிசாந்தினி அவர்களின் அன்பு மாமனாரும், வரதாராசா, புஸ்பராணி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,சாந்தலட்சுமி, காலஞ்சென்ற மகிழ்ராஜா மற்றும் அருள்ராசன், கிரிசாலட்சுமி, யோகலட்சுமி, ஞானலட்சுமி, தவராசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2024) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு.**
**குடும்பத்தினர் 077 592 5390 (மகன்)**
(CS/56900) J-1



## மரண அறிவித்தல்



மலர்வு 25 . 07 . 1948
உதிர்வு 12 . 12 . 2024

### சிவலிங்கம் தனேஸ்வரலிங்கம்

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், தேவாலயவீதி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட சிவலிங்கம் தனேஸ்வரலிங்கம் அவர்கள் நேற்று (12.12.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - இராசம்மா தம்பதியரின் இரண்டாவது மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இராசமணி தம்பதியரின் மருமகனும், யோகராணி அவர்களின் அன்புக் கணவரும், மகேஸ்வரலிங்கம், காலஞ்சென்ற சுலோஜனா மற்றும் சர்வேஸ்வரலிங்கம், கௌசலா, திரௌபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**தேவாலய வீதி, சங்கானை.**
**குடும்பத்தினர் 077 613 3412**
(CS/56896) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 08 . 1934



மறைவு 12 . 12 . 2024

## அமரர் உத்தமிதேவி அப்புராசா

மூளாயினை பிறப்பிடமாகவும் தொட்டிலடி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட உத்தமிதேவி அப்புராசா நேற்று (12.12.2024) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரமலை-இலகுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் அப்புராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், தவபாக்கியநாதன், அருந்ததிதேவி, நடராஜா மற்றும் தங்கதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வெற்றிவேல்நாதன (மாயன்), சண்முகநாதன் (இந்தி), செல்வகுமாரி (ராணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்கினேஸ்வரி, விமலாதேவி, காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபிராஜ், ஜெகாம்பிகா, கிருஷாந்தி, மயூரன், கிஷாந்தன், அனுஷிகா, துஷாந்தன், சாமினி, றொசாந், ஜெசானி, சாரங்கன், பிரசாந், அனுஷாந் ஆகியோரின் பேர்த்தியும் இஷான், ஈகன், சர்வேஸ், ஈவன், விஸ்ணிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
ராணி-: 077 190 0625
றொசாந்-: 077 454 4401
இந்தி-: 647 284 4377
கிஷாந்தன்-: 33 78 189 5052

தொட்டிலடி,
சங்கானை.

(CR 43879) P-1

பயிரழிவுப் பாதிப்புகளுக்கு

# ஒரு ஹெக்ரேயருக்கு ஒரு இலட்சம் இழப்பீடு

கொழும்பு, டிசெ.13

விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு ஹெக்ரேயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா பூரண இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

விளைநிலங்களைத் தயாரிக்கும் போது தற்போதுள்ள சுற்றறிக்கைகளைப் பற்றிச் சிந்திக்காமல் புரிந்துணர்வுடன் செயற்படுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார். (ச-இ)

## ஊழல் ஒழிப்புக்கு கனடா ஒத்துழைப்பு

கொழும்பு, டிசெ.13

ஊழல் மோசடியை மட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச்செல்லும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடியத் தூதுவர் எரிக் வொல்ஷ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்கவுடனான சந்திப்பில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

ஊழல் மற்றும் மோசடியை ஒழிப்பது தொடர்பில் கனடா அரசாங்கத்தின் அனுபவங்களை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. (ச-இ)

## சமூக விஞ்ஞான கருத்துரை நாளை

*யாழ்ப்பாணம், டிசெ.13*

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் கருத்துரை நிகழ்வு போயா தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு 'இரு உலகப் பார்வைகள்' எனும் தலைப்பின் கீழ் இடம்பெறவுள்ளது.

தேசிய இலக்கியப் பேரவையின் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் பணிமனையில் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

கருத்துரையில் சமூக விஞ்ஞானக் கருத்துகளில் ஆர்வம்மிக்க அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிர்வாகக் குழுவினர் கேட்டுள்ளனர். (ச-33)

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 05 . 1983



இறப்பு 11 . 12 . 2024

## கிருஸ்ணபிள்ளை கயின்தவநாதன்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை கயின்தவநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (11.12.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அருந்தவமலர் - கிருஸ்ணபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பார்த்தீபராஜன் - சோபனா தம்பதியரின் அன்பு மருமகனும், கபிர்த்தனா அவர்களின் அன்புக் கணவரும், ஷரோன், பிரஹதி ஆகியோரின் அன்புத் தந்தையும், தபோதினி அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
தோப்பு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/56899) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 2009



மறைவு 07 . 12 . 2024

## அமரர் பிரபாகலேந்திரன் சுஜீனா

லண்டனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபாகலேந்திரன் சுஜீனா 07.12.2024 ஆந் திகதி சனிக்கிழமை லண்டனில் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் பிரபாகலேந்திரன்-கனுஷா தம்பதியின் அன்பு மகளும் அக்ஷனின் அன்புச் சகோதரியும் சின்னவி-மணி, கணேசன்-இராஜபூபதி தம்பதியினரின் பாசமிகு பேர்த்தியும் தெய்வேந்திரம்-செல்வி (ஜேர்மனி), ரவிதீஸ்-ஜீவா (லண்டன்), பற்குலேந்திரன்-சிவறாஜினி, பிரபு-ஜென்ஷா ஆகியோரின் அன்புப் பெறாமகளும் துரைசிங்கம்-யசோதா, அற்புதராஜா-வசந்தா (ஜேர்மனி), மயூதரன்-ராதா (ஜேர்மனி), கௌஜியாந்-கனோஜமதி (லண்டன்), பிரதீப்ராவ் ஆகியோரின் அன்பு மருமகளும் றஜீவன், நிறோஜன், சந்துரு, லாவண்யா, அமிஷா, அஞ்சனா, சுயாந், நிதுஜா ஆகியோரின் மைத்துனியும் ஆகாஸ், நிலக்ஷன், கோகுல், சிநேகா, மானுஷா, லினுஷன், ஸ்ரெலினா ஆகியோரின் உடன்பிறவாத சகோதரியும் ஆலியாவின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.12.2024) வெள்ளிக்கிழமை இலங்கை நேரம் பிற்பகல் 3.30 மணியளவில் (லண்டன் நேரம் முற்பகல் 10.00 மணி), லண்டனில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வை நேரடி ஒளிபரப்பு மூலமாக செல்வநகர் நாவற்குழி வடக்கு கைதடியில் அமைந்துள்ள இல்லத்தில் பார்வையிட முடியும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செல்வநகர்,
நாவற்குழி வடக்கு
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 316 4431

(CS 2036 V-1

## இறக்குமதி அரிசி விநியோகம்

கொழும்பு, டிசெ.13

தனியார் இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதியாளர்கள் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்ததுடன், நேற்றுமுன்தினம் 75,000 கிலோ அரிசி சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இருந்து சம்பா மற்றும் வெள்ளை பச்சை அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். படவரைஞர்களைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2025

2025ம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு/ புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கனவே பதிவு செய்திருப்பவர்களும், புதிதாக பதிவு செய்பவர்களும் படவரைஞருக்கான NVQ Level 5 in Drafting Technology (Building) சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். பதிவுகளை புதுப்பிக்காத படவரைஞர்களால் வரையப்படும் வரைபடங்கள் 2025.01.01 இற்கு பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இப்பதிவிற்கான விண்ணப்பப்படிவங்களை எமது சபை உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் சபை உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ள முடியும்.

**சீ.சபேசன்.**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.** 2024.12.13

(CR/43875) J-1

## அறிவித்தல்
## வவுனியா வடக்கு பிரதேசசபை - நெடுங்கேணி

எமது சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்ட வரைவு 10.12.2024ஆம் திகதி தொடக்கம் 23.12.2024ஆம் திகதி வரை தலைமை அலுவலகம், சபையின் பொது நூலகங்கள், www.vavuniyanorth.ps.gov.lk என்கின்ற சபையின் இணையத்தளம் மற்றும் www.facebook.com/vnpsnk என்கின்ற முகப்புத்தகத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.


பொதுமக்கள் குறித்த வரவுசெலவுத்திட்ட வரைவினை பார்வையிட்டு தங்களது அபிப்பிராயங்களை எதிர்வரும் 23.12.2024 ஆம் திகதிக்கு முன்னதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்கமுடியும் என்பதனை அறியத் தருகின்றேன்.

**சோ.மணிவண்ணன்**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேசசபை,**
**நெடுங்கேணி.**

(CR/43874) J-1

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
26 . 11 . 1932



**மறைவு**
12 . 12 . 2024

## சின்னக்குட்டி (ஆசைப்பிள்ளை) பண்டாரம் இராசதுரை

முன்னாள் லூயிஸ் பிறவுன் மக்வூட்ஸ் கொம்பனி - மவுசாகலை சீபாத தோட்டத்தில் வேலை பார்த்தவரும், உரும்பிராய் மேற்கு கிராம அபிவிருத்திச்சபைத் தலைவராகவும், பர்வதவர்த்தினி அம்மன் கோயிலில் 17 வருடங்களாக உப தலைவராகவும், முதியோர் சங்க காசாளராகவும் கடமை புரிந்தவருமான பண்டாரம் (ஆசைப்பிள்ளை) இராசதுரை அவர்கள் நேற்று (12.12.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சின்னக்குட்டி பண்டாரம் (ஆசைப்பிள்ளை) மற்றும் மயிலங்காடு ஏழாலையைச் சேர்ந்த சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், உரும்பிராய் சந்தி பிரபல வர்த்தகர் முத்துக்குமார் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான ப.தம்பிராசா (லக்கம் எஸ்ரேட், மஸ்கெலியா), சிவபாக்கியம் (பிரபலவர்த்தகர் - குருநாகல்), ப.தம்பித்துரை (பிரபல சுருட்டு தொழிற்சாலை அதிபர்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சீ.சரஸ்வதி, ந.பரமேஸ்வரி, மு.ஜெயரத்தினம், மு.சுந்தரலிங்கம், மு.சுந்தரமூர்த்தி, மற்றும் Dr. மு.யோகலிங்கம் (லண்டன்), து.மகேஸ்வரி (கனடா), மு.சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவகுல வீதி,**
**முத்துக்குமார் லேன்,**
**உரும்பிராய் மேற்கு.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**ஜெய்கரன் - 077 684 5610**
**ஹேமராஜ் (கனடா) - +1 (416) 670 0302**
**வரதன் (கனடா) - 416 805 7392**

(CR56297) N-1

# உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விசாரணையைத் தொடரவும்

கொழும்பு, டிசெ.13

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்திருந்த வழக்குகளைத் தள்ளுபடி செய்யுமாறு முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்த்தன ஆகியோரின் கோரிக்கையை நிராகரித்த நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அனைத்து வழக்குகளையும் விசாரிக்குமாறு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.


முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலாந்த ஜயவர்த்தன ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட கட்டுவாப்பிட்டிய குண்டுவெடிப்புத் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 182 நட்டஈடு வழக்குகள் தொடர்பில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பிறப்புச்சான்றிதழ் அற்றோருக்கு யாழ்.மாவட்டத்தில் பதிவுகள்

யாழ்.மாவட்டத்தில் பிறப்பு அத்தாட்சி பதிவற்ற நிலையிலிருந்த 45 பிள்ளைகளுக்கு பதிவு நடவடிக்கைகள் பிரதேச செயலகங்களால் முன்னெடுக்கப்பட்டன. கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் டிசெம்பர் 11 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 54 பிள்ளைகள் பிறப்பு அத்தாட்சி பதிவின்றி காணப்பட்டநிலையில் அவர்களில் 45 பேருக்கு பிறப்புச்சான்றிதழ்கள் வழங்கு வதற்காக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிகுதி 9 பேர் பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 125)

# கண்ணீர் அஞ்சலி

## பண்டாரம் இராசதுரை



அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோயில் முன்னாள் உப தலைவர் பண்டாரம் இராசதுரை அவர்கள் காலமானார் எனும் செய்தியறிந்து துயரடைவதோடு மூத்த அனுபவமிக்க அம்பாள் கைங்கரியங்களில் மூப்பு நிலையினையும் பொருட்படுத்தாமல் முன்நின்று செயற்பட்ட கரும வீரனின் இழப்பு எமக்கு மாத்திரமல்ல அவர் சார்ந்த அனைவருக்கும் பேரிழப்பாகும். அவ் வகையில் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா அம்பாள் பாதத்தில் சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

**பரிபாலன சபையினர்**
**உரும்பிராய் பர்வதவர்த்தினி**
**அம்மன் கோயில்.**

(CR 43877) V-1

## பகிரங்க அறிவித்தல். வலிகாமம் வடக்கு பிரதேச சபை (காங்கேசன்துறை) 2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் (வரைபு) பொதுமக்கள் பார்வைக்கு சமர்ப்பித்தல்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் (வரைபு)1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை சட்டப்பிரிவு 168க்கமைய தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் கருத்தாய்வுக்காக 2024.12.13 ஆம் திகதியிலிருந்து 2024.12.26ஆம் திகதி வரை வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் பொதுநூலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பாதீட்டில் 2025ஆம் ஆண்டில் சேகரிக்கக்கூடிய வருமானங்கள், செலவின விடயப் பரப்புக்கள் சம்மந்தமாகவும் எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளதும் ஏற்கனவே தங்களின் முன்மொழியப்பட்டதுமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளக்கப்பட்டுள்ளது. கருத்துக்கள் ஏதும் இருப்பின் 2024.12.26 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக தெரிவிக்க முடியும் என்பதை இத்தால் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

**தபால் முகவரி: செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை**
**தொல்லைகட்டி,**
மின்னஞ்சல்: vnpskks@yahoo.com
தொலைபேசி இல: 021-2241130

**சு.சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை,**
**காங்கேசன்துறை. 2024.12.13**

(CR/43876) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணியில்...

பருத்தித்துறை மருத்துவமனையில் மர்மக்காய்ச்சலுடன் நேற்று 14 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள நிலையிலேயே, அவர்களில் ஐந்து பேர் வரணியின் குறிப்பிட்ட பகுதியொன்றைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. இதையடுத்து, அந்த இவருடைய குறிச்சி தொடர்பில் சுகாதாரத் துறையினர் சிறப்புக் கவனம் செலுத்தவுள்ளனர் என்று சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தொற்று பரவ ஆரம்பித்த பின்னர், ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து அல்லது குறிச்சியிலிருந்து அதிகளவானவர்கள் (ஐந்து அல்லது ஐந்துக்கும் மேற்பட்டவர்கள்) சிகிச்சைக்கு வந்துள்ள முதலாவது சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.

எலிக்காய்ச்சல் மற்றும் மர்மக்காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் இந்த மாதம் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50இனைத் தாண்டியுள்ளது. கடந்த மூன்று நாள்களில் மட்டும் 43 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 80 வீதமானவர்கள் ஆண்கள் என்றும் சுகாதாரத்துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - மர்மக்காய்ச்சல் அதிகம் அவதானிக்கப்படும் இடங்களில் சிறப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் தடுப்புச் செயற்றிட்டங்களை மேற்கொள்ளவும் சுகாதாரத்துறையினர் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளனர்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவினரும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவினரும் தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த மூன்று நாள்களாக விழிப்புணர்வு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-100)

## எம்.பி...

பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் தேசியப் பட்டியல் பிரச்சினைக்கு ஐக்கிய மக்கள் சக்தி நேற்று தீர்வு கண்டுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணி சிதையாத வகையில் பங்காளிக் கட்சிகளுக்கும் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கப்பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்களில், பங்காளிக் கட்சிகளுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய மூன்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஷாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஆ.மொஹமட் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சுஜீவ சேனசிங்க ஆகியோரின் பெயர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்களைவிட ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேசியப் பட்டியல் உறுப்பினராக இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## சிறைக்...

அழைத்துவரப்பட்ட சிறைக் கைதியொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

வழக்கொன்றுக்காக யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு அழைத்து வரப்பட்ட இரத்தினசிங்கம் சந்திரகுமார் (வயது-40) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மாரடைப்புக் காரணமாகவே இந்த இறப்பு சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது என மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (அ-ம-20-26)

## மயங்கி...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தங்கிநின்று சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் நேற்று மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

நாவற்குழி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த கந்தையா ஆனந்தராசா (வயது-65) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி வி.அன்ரலா மேற்கொண்டார்.

மாரடைப்புக் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம-159-26)

## சித்திரவதை...

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் தனியார் விடுதியொன்றில் நடைபெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய காலங்களில் சிவில் அரசியல் உரிமை ஒரு பாகமாகவும், சமூக பொருளாதார கலாசார உரிமைகள் இன்னொரு பாகமாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இன்று வாழ்வில் சமத்துவம் அற்றுப்போதல் மிகப்பெரும் மனித உரிமை மீறலாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் சிறப்புத் தேவையுடையவர்களின் உரிமை முக்கியமானது. அத்துடன் மாற்றுப் பாலினம் தொடர்பிலும் ஆணைக்குழு முக்கியமாகக் கவனம் செலுத்துகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பாணப் பிராந்திய அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் அனேகமானவை இரண்டு வகையான முறைப்பாடுகளாகவே காணப்படுகின்றன. ஒன்று சித்திரவதை. மற்றையது அரச நிறுவனங்களுக்கு எதிராகக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் - என்றார். (அ-ம-125)

## சபாநாயகருக்கு...

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்ததாவது:-

தான் கலாநிதிப் பட்டம் உடைய பொறியியலாளர் என சபாநாயகர் தகவல் வழங்கியுள்ளார். மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார் எனவும் கூறப்பட்டது. ஆனால் அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, ஜப்பான் பல்கலைக்கழகத்தின் கலாநிதி பட்டம் இருப்பதாகவும் கூறப்பட்டது. தேசிய மக்கள் சக்தியினர் அவரை 'கலாநிதி' என்றே விளித்துவந்தனர். 'கலாநிதி' எனக் குறிப்பிட்டே சபாநாயகர் பதவிக்கு அவரின் பெயர் முன்மொழியப்பட்டது. ஆனால், ஜப்பான் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றாரா என்பதிலும் எமக்குச் சந்தேகம் உள்ளது.

தனது கல்வித் தகைமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைக்கு இரு வாரங்கள் கடந்தும் சபாநாயகர் இன்னும் பதிலளிக்கவில்லை. சபாநாயகர் பதவி என்பது முக்கியத்துவம் மிக்கது. அதனை வகிப்பதற்கு அசோக ரன்வலவுக்கு தகுதி உள்ளதா என்ற கேள்வி எழுகின்றது. தமது கட்சி உறுப்பினரான சபாநாயகருக்கு தேசிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்காவிட்டால், நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதைத்தவிர வேறு வழியில்லை - என்றார்.

இதேவேளை - சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கூறியுள்ளார். (அ-ம-44)

## வரலாற்றின்...

சபாநாயகருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஆறாவது நம்பிக்கையில்லாப் பிரேரணையாகவும் அமையும். 1947ஆம் ஆண்டுமுதல் 2024 ஆம் ஆண்டுவரை சபாநாயகர்களுக்கு எதிராக ஐந்து நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை ஐந்தும் வாக்கெடுப்பின்போது தோல்வி அடைந்துள்ளன. இவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் தோல்வி அடைந்திருந்தாலும் அதன் பின்னர் இரு சபாநாயகர்கள் பதவி விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## முன்னாள்...

அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உயர் நீதிமன்றில் அசாத் சாலி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவின்மீதே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, குறித்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த அப்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அப்போதைய பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஷாந்த டி சொய்சா மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயந்த பயாகல ஆகியோர் அடிப்படை உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவின் பிரதிவாதிகள் தன்னிச்சையாக நடந்துகொண்டு மனுதாரருக்கு ஏற்படுத்திய சேதத்திற்காக, அசாத் சாலிக்கு அரசு 75 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கைது மற்றும் தடுத்து வைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் அசாத் சாலி சார்பில், தன்னையே மனுதாரராக பெயரிட்டு, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தார். சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மரணமடைந்ததைத் தொடர்ந்து வழக்கை முன் கொண்டு செல்ல பிறிதொரு சட்டத்தரணியைப் பெயரிட்டு தேவையான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அதன் பின்னர் இந்த வழக்கின் நிலையான சட்டத்தரணியாக தர்மஜா தர்மராஜா செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## நம்பிக்கையில்லாத்...

களால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்புத் தொடர்பில் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்னவிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சபாநாயகரின் கல்வித் தகைமை தொடர்பில் சபாநாயகரால் உரிய விளக்கமளிக்கப்படவுள்ளது. அவர் விரைவில் அந்த அறிவிப்பை விடுப்பார். அவருடைய அறிவிப்பு வெளியான பின்னரே அடுத்தகட்டம் தொடர்பில் கருத்துக்கூற முடியும். நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு 159 உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணை எதற்கு? அவ்வாறு வந்தால் என்ன நடக்கும் என்பது பற்றி எதிரணிகள் சிந்தித்தால் நல்லது” - என்றார். (அ-ம-44)

## கொழும்பிலிருந்து...

மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் சமூக மருத்துவ ஆலோசகர் பிரபா அபயக்கோன் தலைமையிலான குழுவினர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குச் சென்று அங்கு மருத்துவ அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர். (அ-ம-26-100)

## பெருந்தொகை...

எரிபொருள் முடிவடைந்த நிலையில் சந்தேகத்துக்கு இடமான வகையில் கரையொதுங்கிய படகைச் சோதித்தபோதே, அதற்குள் பெருந்தொகை கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. படகில் வந்த இருவர் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், சந்தேகநபர்களை ஏழு நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-125-20)

## மீன்பிடிக்கச்...

தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி, ஞாயிறுகளில் வகுப்புகளை நிறுத்துங்கள்

## யாழ்.மாவட்ட பதில் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 13

மாணவர்களுடைய நலனைக் கருத்திற் கொண்டு வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் கல்வி நிலைய வகுப்புகளை நடத்தாமல் இருப்பதற்கு மீண்டும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்திலே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னைய மாவட்டச் செயலாளரால் கொண்டுவரப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களை வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நிறுத்தும் செயற்பாட்டை மீள நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய தரம் - 9 க்கு உட்பட்ட மாணவர்களுக்கான தனியார் கல்வி நிலைய வகுப்புகளை வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்த வேண்டாம் என்றும் கோரிக்கை விடுப்பதாகவும், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ரி-125)



# மணிவிழாக் காண்கிறது இந்திய ஐ.ரி.ஈ.சி. திட்டம்

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின் 60 ஆம் ஆண்டுக் கொண்டாட்டம் யாழ்ப்பாண இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணக் கலாசார மையத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண ஆளுநர் என்.வேதநாயகன், வடமாகாணசபைத் தலைவர் சி.வி. சிவஞானம், ஆளுநரின் தலைமை செயலாளர் எல்.இளங்கோவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராஜா மற்றும் ஐ.ரி.ஈ.சி.திட்டத்தின் கீழ் இந்தியாவில் பயிற்சி பெற்ற பல்வேறு துறைகளின் நிர்வாகிகள், நிபுணர்கள், பழைய மாணவர்கள் கலந்துகொண்டனர். (ச-125)

# சீரற்ற காலநிலையால் யாழில் 8 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

நாட்டில் இரு நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் நேற்றுவரை இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகா மைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/14 கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/165 கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (ச-27)

# ஆவரங்கால் விபத்து: காயமடைந்தவர் பலி

யாழ்ப்பாணம், டிசெ. 13

ஆவரங்கால் பகுதியில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கிருஷ்ணபிள்ளை கஜிந்தவநாதன் (வயது-41) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

# வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்பு!

யாழ்., டிசெ. 13

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அல்வாய் பகுதியில் தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆண்டாள் தோட்டம், அல்வாய் மேற்கு, அல்வாயைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை (வயது86) என்ற வயோதிபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

# தையிட்டியில் இன்று மீண்டும் போராட்டம்!

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும், அதனைச் சூழவுள்ள தமிழ்மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் குறித்த விகாரைக்கு அருகில் மீண்டும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-66)



# பருத்தித்துறையில் பண்பாட்டு விழா

பருத்தித்துறை பிரதேசசபையின் உள்ளூராட்சி மாத நிகழ்வும், பண்பாட்டு விழாவும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை தனியார் விருந்தினர் விடுதியில் பருத்தித்துறைப் பிரதேசசபைச் செயலாளர் அருணகிரி வினோராஜ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொன்னம்பலம் சிறிவர்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் உள்ளூராட்சி மாதத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரிவுகளில் சாதனைபடைத்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-33-27)

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 01 . 1963



மறைவு
12 . 12 . 2024

## சின்னத்தம்பி பரஞ்சோதி

(சோதி ஸ்ரூடியோ - உரிமையாளர், மல்லாகம், தெல்லிப்பளை, குப்பிளான்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பரஞ்சோதி (சோதி ஸ்ரூடியோ உரிமையாளர்) நேற்று (12.12.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவரான தருமலிங்கம் மற்றும் பொன்மணி தம்பதியரின் மருமகனும், கருணாதேவியின் அன்புக் கணவரும், சுயந்தன் (சோதி ஸ்ரூடியோ), சுகிதா, தர்சிகா (விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் - யா / புனித தெரேசாள் மகளிர் கல்லூரி - அச்சுவேலி), அனிதா (ஆசிரியர் - யா / திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை), காலஞ்சென்ற நிரோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டினோகா, தயாபரன் (களஞ்சியகாப்பாளர் கார்கில்ஸ் நிறுவனம் - கிளிநொச்சி), விஜயானந்தம் (பிரான்ஸ்), சாரங்கன் (மின்சாரசபை தொழில்நுட்ப உதவியாளர் - சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும், தனுசியன், யஸ்மிகா, ஹரிஸ்மன், ஆருசி, அதிசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல் :
குடும்பத்தினர்
077 151 0657 (சுயந்தன்)

(CR/56894) N-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org